ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணு 2. சிலோன் 15-சதம் REGD. NO 4642.

திராவிடநாடு

மலர் 11. 31—8—52 இதழ் 9.

‘புண்ய பூமியில்!’

தெற்கின் நிலை

சர்தார் கே. எம். பணிக்கரைப் பற்றி, அறியாதோர் இருக்க முடியாது. சமீபகாலம் வரையில், சீனுவில் இந்தியத் தூதுவராக இருந்தவர். நல்ல எழுத்தாளர், ஆங்கிலத்தில் மட்டுமின்றி, தாய்மொழியான மலையாளத்திலும், பற்பல நூல்கள் எழுதி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அத்தகைய சிந்தனைச் செல்வருக்கு, டில்லி பல்கலைக் கழகம், மரியாதை செய்து கவுரவித்திருக்கிறது. ‘டாக்டர் பட்டமும் வழங்கியிருக்கிறது. மேற்படி மரியாதை விழாவுக்குத் தலைமை வகித்தவர், இந்தியக் குடியரசுத் தலைவர், டாக்டர் ராசேந்திரபிரசாத். மலையாள மொழியில் அவர் செய்திருக்கும் சேவைகளை யொட்டியே ‘டாக்டர்’ பட்டம் வழங்கியிருக்கிறார்கள். மேற்படி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட கே. எம். பணிக்கர், வடநாட்டினரின் போக்கு குறித்து, பேசியுள்ளார்.

“இலக்கியத் துறையை எடுத்துக் கொண்டால், தென்னிந்திய மொழிகள், ஒவ்வொரு நிலையிலும் பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் அருகதையுள்ள அற்புதச் செல்வங்களாகும். ஆனால், “ஆர்யா வர்த்தம் எனும் புண்ய பூமியில்” இருப்பவர்களோ, தக்காண கலாச்சாரத்துக்கு என்ன அந்தஸ்துத் தரவேண்டுமோ, அதைத் தருவதில்லை. என் நெஞ்சை மிகவும் வருத்திவரும் விஷயம் இதுவாகும்”

பணிக்கர் அவர்கள் முற்போக்குக் கொள்கையில் ஓரளவு பற்றுதலும் பாசமும் கொண்டவர். அவர், தனக்கு ‘பட்டம்’ வழங்கப்பட்ட இடத்தில், தனது நெஞ்சைத் துளைக்கும், நிகழ்ச்சியாக மேற்படி விபரங்களை அறிவித்துள்ளார் — ஆகஸ்டு 22-ந்தேதி, டெல்லி பல்கலைக் கழகத்தில், பணிக்கர், ‘ஆர்யாவர்த்த புண்யபூமி’ எனக் கிண்டலோடும் வேதனையோடும் குறிப்பிட்ட வார்த்தைகள், ராசேந்திர பிரசாத்தின் உள்ளத்தில் தைத்தது போலும்! அதனாலேயே தனது பிரசங்கத்தில் பெரும்பாலும் ‘வடவருக்கும் தென்னிந்திய மொழிகளுக்கும்’ உள்ள தொடர்பில்லா நிலைமைகளை, விளக்க முயன்றிருக்கிறார். “தென்னிந்திய மொழிகளைப்பற்றி வடக்கேயிருப்போருக்கு ஒன்றும் தெரியாது என்பதைக் கூற வருத்தப்படுகிறேன். ஆனால், வடக்கைவிட தென்னாடுதான், கலாச்சாரப் புகழுக்குக் காரணமாகும்.” என்று புகழ்ந்து பேசியிருக்கிறார், அதோடு நிறுத்திவிடவில்லை, அடிக்கடி நமது பொதுக் கூட்டங்களில் கூறுவதுண்டல்லவா, ‘அவதாரங்கள் தோன்றியதெல்லாம், தெற்கில் அல்ல; வடக்கேதான்!’ என்று. அதைப் பற்றியும் அவரே கூறுகிறார், ‘:சமீபத்தில் ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொன்னார்—அவதாரங்கள் வடக்கேதான் உண்டாயிற்று; ஆனால், ஆச்சார்யார்கள் தோன்றி வந்தது தெற்கில் தான் என்பதாக. கொள்கைகளையும் புதுவழிபாடுகளையும் வகுப்பதில் தெற்குத்தான் வழிகாட்டியாயிருக்கிறது.”

ராசேந்திரர் உரை, இது! அவர் மட்டுமல்ல, வடநாட்டினரில் முக்யஸ்தர்களாயிருப்போர் அடிக்கடி, இது போல, இப்போதெல்லாம் தெற்கைப் புகழ்ந்து பேசுகிறார்கள். “தெற்கே — புராதன கலாச்சாரத்தின் உறைவிடம்”—என்று, வாயாரப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். தென்னிந்திய மொழிகளின் தொன்மையைப்பற்றி சரிதங்களைப் புரட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்! இந்த அளவுக்கு அவர்கள் மனோநிலையில், விழிப்பு ஏற்பட்டிருப்பதன் காரணம், தெற்கில் வளர்ந்துவரும் உரிமை உணர்ச்சிதான்.

தென்னாட்டவரின் உரிமையுணர்ச்சியின் வேகம், வடவரின் ஆதிபத்யப போக்கில் புதுத் திசையை உண்டாக்குகிறது. “இந்தி கட்டாய மொழி ஆக்கப்படவேண்டும்” என்று ஆவேசத்தோடு, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முழக்கமிட்டோரெல்லாம், இப்போது, அந்தப் பிடிவாதத்தை விட்டுவிட்டு, ‘தெற்கின் புகழை உணரவேண்டும்’ என்று பேசத் தலைப்பட்டுள்ளனர். இந்த மனமாற்றம், தெற்கில் வளர்ந்துவரும் வடநாட்டு ஆதிபத்ய எதிர்ப்பின் விளைவாகும். வடக்கைவிட தெற்கு கலாச்சாரத்தில் சிறந்தது! —இது பன்னெடுங்காலமாக நாம் கூறி வந்தது “தமிழனே இது கேளாய்! உன் தாய்மொழி சிறந்ததோர் சுரங்கம்!!” என்று, நாமிசைத்த கீதம் கேட்டபோது, காதுகளை மூடிக் கிடந்தோரின், கருத்துக்களையெல்லாம் இப்போது, திருப்பிவிட்டிருக்கிறது. தமிழனின் கலாச்சாரம், தொன்மை வாய்ந்தது. எகிப்து எழிலோச்சியிருந்த காலத்தில், இன்பத் தமிழகம் எழுச்சியோடிருந்தது! ரோம் சாம்ராஜ்யத்தின் புகழுக்கும் தமிழகத்துக்கும் தொடர்பிருந்த காலம் உண்டு! மாவீரன் அலெக்சாண்டரின் வீரர்கள் வடநாட்டு புருஷோத்தமனை வெற்றிகொண்ட நேரத்திலும், தமிழக வாழ்வு தளிர்ச் சோலையைப் போன்றே இருந்தது! சேரனின் பாடலும், சோழனின் சேவையும், பாண்டியனின் பாராட்டும் பெற்றுத் தமிழன்னை அரியாசனத்திலிருந்ததை — மறுப்போர் இரார். இந்தக் கலாச்சாரத்தைத் தான், நாம் அடிக்கடி குறிப்பிடுகிறோம். கால வெள்ளத்தால் அழியாது நிற்பது தென்னாட்டின் கலாச்சாரம்! திராவிடத்தின் பண்பாடு!!—இதை, அழித்து ஒழிக்க ஆரம்ப முதல் முயன்று வருவதே, வடநாட்டுக் கலாச்சாரத்தின் ஆசையாகும். அந்த ஆசை, பழைய காலத்தில் மத ரூபத்தில் வந்தது! வேதங்கள் உருவில் தோன்றின! சூழ்ச்சிகள் மூலம் உருவாயின! இப்போது அதிகாரத்தின் மூலம், பரப்ப எத்தனிக்கிறது. “காட்டு மிராண்டிக் காலத்திலிருந்து விடுபட்ட மனித சமூகத்தின் வளர்ச்சியைக் குறிப்பதே — கலாச்சாரம்” என்பதாக, கலாச்சாரம் என்பதற்கு விளக்கம் தரப்படுகிறது. இந்த விளக்கப்படி பார்த்தால் நல்லதோர் பொற்காலத்தை இந்திய நாடு பெற்றிருக்கிறது' பிற்போர முன்னரே, தான் ஆலமரத்தைக் கண்டு வாழ்ந்திருக்கிறது!! அத்தகைய சிறந்ததோர் திராவிட கலாச்சாரத்தை, எளிதில் அடக்கி ஆள எத்தனிப்பதை எவர்தான் ஒப்ப முடியும்? அதிலும், பிறர் கலாச்சாரத்தால் ஏற்பட்ட கேடுகள் மூலம் நொந்து நைந்திருக்கும் போது! இந்த உண்மையை உணர மறுத்ததாலேயே, ஆதிக்கத்திலிருப்போர், உறுமியதும் சீறியதும். ஆனால் இப்போது! அன்புமொழி பேசுகிறார்கள்—தெற்கின் மாட்சி குறித்துப் பேசுவது முறையும் என்று கருதுகிறார்கள். அவர்கள் பேசுவதிலுள்ள அந்தரங்கம் யாவரும் அறிந்ததுதான்! ஆனால், உண்மையை, அவர்களும் உணர்ந்து பேசுவதற்காக மகிழ்கிறோம்.

வடக்கைவிட தென்னாடு புராதன சீர்பெற்றது!

இந்த உண்மையை உரைக்கும் அவர்கள், இவ்வளவு சீர்பெற்ற ஒரு பூமியை அடக்கியாள, ஏன் முனைய வேண்டும்! வடக்கு — தெற்கு. கலாச்சாரத் துறையில் இரு துருவங்கள் கொண்டது—இதனை, ஒன்றாக்கி வாழ வைக்க நினைப்பதும், எல்லோரும் ஒரு தந்தையின் குழந்தைகள் என்பதும் பலிக்கவா முடியும்? ஒப்புக்கு இது பயன்படலாம்! காரியத்துக்கு வராது!! இதைத்தான் டாக்டர் பணிக்கர், “ஆர்யாவர்த்தப் புண்ய பூமியில், தெற்கின் சிறப்புத் தெரியவில்லை” என்று ரத்னச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். தெரியாது! தெரிந்ததைப் போல் பாவிக்க நினைப்பதும் பேசுவதும் இதயத்திலிருந்து எழும் வார்த்தைகளாகவும் இருக்க முடியாது!!

★

★ இரு உள்ளம் ★

“தமிழ் மாகாணம் வரலாம் — ஆனால், இந்தியாவிலிருந்து பிரிந்த தமிழ் மாகாணம், என்றால் தமிழனாகிய நான் சம்மதிக்க முடியாது. முதலில் இந்தியன்; பின்னரே தமிழன். இது சம்பந்தமாகக் கிளர்ச்சி இருப்பதால் இது பற்றிக் கூற வேண்டியிருக்கிறது. மக்களுக்குள்ள தமிழன்பினால் ஏமாற்றப் பார்க்கிறார்கள்”

—டாக்டர் சுப்பராயன்,
(23—8-52 தினமணி.)

*

“இந்தியாவே ஒரு குடும்பம். அதில் வடநாட்டவர் தென்னாட்டவர் என்கிற வித்தியாசமோ, பிரிவு மனப்பான்மையோ இருக்கக்கூடாதென்று சுப்பராயன் கூறினார். உண்மைதான். ஆனால் வந்தவர்களுக்கெல்லாம் வரவேற்பளிப்பது தமிழ்நாடுதான். ஆனால் வடநாடு அப்படிப்பட்டதல்ல. குடும்பத்தில் ஒருவர்மாத்திரம் நாட்டாண்மை செய்வதும் பிறர் கை தூக்கும் பொம்மைகளாக இருப்பதும் கூடாது. சுப்பராயன் கூறுவதற்கு முழுவதும் மாறுபட்ட முறையிலே நான் அபிப்பிராயம் கொண்டுள்ளேன். வடஇந்தியாவில் தமிழனையும் தென்னாட்டையும் கேவலமாக நினைக்கும் மனப்பான்மை உள்ளது என்பது எவரும் மறுக்கமுடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழனுக்குத் தனிமதிப்பு இருந்துவந்தது. ஆனால் தற்போது தமிழன் வெளிநாடுகளில் அடிமை வாழ்வும் கூலிவாழ்வும் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கூலி மனப்பான்மை ஒரு சிலரிடையே பரவி இருப்பதே இதற்குக் காரணம்.”

—பி. டி. ராஜன்,
(23—8—52 தினத்தந்தி.)

கைத்தொழில் கல்வி அறிவுக் காட்சி

கோபால் பாக் : : கோயமுத்தூர்

1—9—52 முதல் காலை 10 முதல் 12 வரை
15—9—52 வரை மாலை 2 முதல் 5 வரை

மத்திய சர்க்கார் தொழிலாளர் மந்திரி
திரு. வி. வி. கிரி அவர்கள்
கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

சென்னை சட்டசபை சபாநாயகர்
திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள்
தலைமை வகிக்க இசைந்துள்ளார்.

இயந்திர விஞ்ஞானம் எவ்விதம் குடிசைத்தொழிலில் நடமாடுகிறதென்பதையும், தொழில் கலை நுணுக்கங்களை எவ்விதம் குறுகிய காலத்தில் அறிந்துகொள்ளமுடியும் என்பதையும், தெரிந்துகொள்ள இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

கோயமுத்தூர், 24-8-52

ஜி. டி. நாயுடு,
President, I. L. W. A. Ltd.,

திராவிடநாடு

காஞ்சி] 31—8—52 [ஞாயிறு

தற்கால சாந்தி

★

ஒற்றுமையைச் சீர்குலைக்கும்! உதவாத காரியம்! உருப்படாது!! தகராறுகள் அதிகமாகும்!

முளையிலேயே கிள்ளியெறிய வேண்டியதற்கு சட்டம் ஒன்று தேவையா?

*

சென்னை சர்க்காரின் விவசாய அவசரச் சட்டம் சம்பந்தமாக, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். மகாலிங்க அய்யர், கே. சாரங்கபாணி அய்யங்கார் ஆகியோர் மேற்கண்ட 'அபிப்பிராயங்களை'த் தெரிவித்ததாக, கஸ்தூரி சீனுவாசய்யங்காரை ஆசிரியராகக் கொண்ட "இந்து" இதழ், பிரசுரித்திருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்த ஆச்சாரியார் அவர்களோ, "இந்தச்சட்டம் உங்களுக்கு தீங்கு தருவதல்ல" என்று, மிராசுதார்களைப் பார்த்து கூறியிருக்கிறார். "காலநிலையை அனுசரித்து நடக்க வேண்டாமோ?" என்றும் புத்திமதி கூறியுள்ளார்.

கடிவாளமில்லாத குதிரைக்குச் சிறிது கட்டுப் போட்டால் அது எகிறிக் குதிப்பதுபோல, 'உழைக்காதுவாழும் உடம்பைக் கொண்ட', 'இந்து' இதழினர், ஆச்சாரியாரின் அவசரச் சட்டம் காண, சீறுகின்றனர். உழைக்காமல் வாழ்வோருக்கு எப்போதும் ஏற்படுகிற 'வியாதி' தான், இது. சீற்றம், உழைப்போர் மத்தியிலிருந்து வந்தால், அது சிந்திக்கப்படவேண்டிய விஷயமாகும். அவர்களிடமிருந்து அல்ல, அதிருப்தி வீசுவது! 'காவிரிக்கரை' வாசிகளிடமிருந்து!!—இது சகஜம். அவர்களிடமிருந்து, ஆத்திரக்கனல் குதிப்பதாலேயே, இந்த அவசர சட்டம், தேவையான நேரத்தில் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக எவரும் கருதலாம். புலியின் வாயிலிருந்து, உயிர் விட்டுக் கொண்டிருக்கும் ஆட்டை மீட்க எத்தனிக்க யாரோ முயல்வதாகத் தெரிந்தாலே போதும். புலி சீறத்தான் செய்யும்! சீறுகிறது, இப்போது.

ஆனால்; ஆச்சாரியார் அவர்களோ தஞ்சை மிராசுதார்கள் மத்தியில் பேசும்போது, "இந்தச் சட்டம் உங்களுக்குத் தொல்லை தராத ஒன்று"—என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். நிலப்பிரபுக்களை தாஜா செய்வதற்காக வீசப்பட்ட வாக்கியமல்ல, அது. உண்மையான நிலையும் அதுதான்! இன்னும் தெளிவாகச் சிந்தித்தால், 'அவர்களை, எழுந்து வரும் கோரப்புயலிலிருந்து' காப்பாற்றும் நோக்கம் கொண்டதெனலாம்.

"நிலம் உழைப்பவனுக்கே!"—என்ற, உரிமைக்குரல், இந்த அவசரச் சட்டம் போன்ற தற்காலீக சாந்தி இல்லையென்றால், உழைப்பாளிகளிடையே வீசும்வேகத்தை அடக்கவா முடியும்? மலபார் போலீசும் படையும்தான் போதுமா! இரத்தம் வயலில் வழிய வழிய, புரட்சிக் கொடிதானே சிவப்பாகும்?—இந்த சூட்சுமத்தை, நன்றாக உணர்ந்ததாலேயே ஆச்சாரியார், இந்த அவசரச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தச் செய்திருக்கிறார். காட்டு வெள்ளம் கரைபுரண்டு வரும்போது சிறு இடுக்குகள் சீக்கிரம் கரைகள் உடையுமாறு செய்துவிடுமே! தந்திர நரியாயிற்றே; அதனால், சாமர்த்தியமாக நிலப்பிரபுக்களுக்கு 'தொல்லைதராதது' என்று, தெரிவித்தும் இருக்கிறார்.

விவசாய அவசரச் சட்டம், தற்காலீக சாந்திக்கானது. ஆனால், அது போதிக்கும் தத்துவம், அடாபிடியுடன் உலவும் நிலப்பிரபுக்களுக்கு, நல்லதோர் பாடமாகும். இதுவரை, குத்தகை சம்பந்தமாகவோ, வாரதார் குறித்தோ, பண்ணையாள் கூலிமுறை பற்றியோ, எவ்வித சட்டமும் வந்ததில்லை. காட்டுராஜ முறைதான்! அதைக் கட்டுப் படுத்துகிறது, இந்தச் சட்டம். "எனது நிலம்" என்று பெருமையடித்துக்கொண்டு சிங்காரமான காரில் சென்னையில் உலவிக் கொண்டிருக்கும் 'பண்ணை'களைவிட, நிலத்தில் உழுபவனுக்கே சலுகைகள் வழங்கப்பட வேண்டும், ஏனெனில் அவன் வாடுகிறான்; என்பதை ஆதிக்கக்காரர்களுக்கு இந்தச் சட்டம் பாலபாடமாகப் போதிக்கிறது.

இந்தப் பாலபாடத்தை, ஆதிக்கபுரியினருக்கு அறிவுறுத்த வேண்டும்என்ற ஆவலுடன்தான் 'அவசரச் சட்டம் கொண்டுவா!'என்று, சட்டசபையில் ஐக்கிய முன்னணியினர் வலியுறுத்தினர். முற்போக்குச் சக்திகள்யாவும், வெளியில் முழக்கமிட்டன. 'இவர்கள் கூறுவதாவது! நாம் கேட்பதாவது!!' — இவ்விதம் தான், ஆதிக்கபுரியில் வாழும் எவரும் கேட்பர். ஆதிக்கத் திமிர், அடங்கும்வரை, இந்த ஏளனச் சொற்களைத்தான் கூறுவர். ஆனால், 'அவர்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது' என்று பணியும் கட்டம், அதிகார உச்சத்திலிருப்போருக்கு ஏற்படுகிறதென்றால், திமிர் குறைகிறது! பயம் அதிகரிக்கிறது!! என்று பொருளாகும். இதையே ஆச்சாரியார் அவர்கள் ஆரூரில் பேசிய வார்த்தைகள் பிரதிபலிக்கின்றன. "இந்த அவசரச்சட்டம் கொண்டு வந்ததுக்குள்ள பெருமை பூராவும் என்னுடையது என்று சொல்லிக் கொள்ளவில்லை. வேண்டுமானால் எனக்கு 60 சதவிகிதமும்கிளர்ச்சிக் காரர்களுக்கு 40 சதவிகிதமும் வைத்துக்கொள்ளட்டும்"—என்று பேசியிருக்கிறார்.

கோபுரத்தில் கொடி கட்டி வாழ விரும்புவர்களின் 'தொனி' குறைவது, முற்போக்குச் சக்திகளின் வெற்றியாகும்! எனவே, விவசாய அவசரச் சட்டம் காண மகிழ்கிறோம்! இதற்குக் காரணமான, சர்க்காரையும்; சர்க்காரின் துப்பாக்கிகளைக் கண்டும் அஞ்சாமல் போராடிய தஞ்சை விவசாயப் பாட்டாளிகளையும் பாராட்டுகிறோம்.

உலகில் வளர்ந்திருக்கும் ஆதிபத்ய வரிசைகளின் பட்டியலில் முதலிடம், பெறுவது நிலச்சுவான்தார் முறைதான். பிறகு வளர்ந்ததுதான், தொழில் பிரபுத்வமும், காலனி ஆதிபத்யமும் பழையதும், ஆணிவேர் விட்டிருப்பதுமான நிலப் பிரபுத்துவம், அதிகமாக இருப்பது திராவிடத்தில்தான்! பழைமைப் பித்தும், சம்பிரதாய முறைகளும், இந்த நிலப்பிரபுத்துவத்தின் அரண்களாகும். இந்தக் கோட்டைக்குள்ளிருந்தே, குறுநில மன்னர்கள் போலக் கொட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றனர் நிலப்பிரபுக்கள்! ஆளுக்கு மூன்று படி—நடவாளுக்கு இரண்டுபடி—அரையாளுக்கு (கல்யாணமாகாதவன்) ஒன்றரைப்படி; இவ்விதம், கூலி கொடுப்பதுதான், தஞ்சை மாவட்டத்தின் பரம்பரை வழக்கம். நெல் அறுவடையின்போது களத்துக்கு இவ்வளவு என்று படிக் கணக்கில் களவடித் தருவார்கள்—சிதறும் பதர்களில் தப்பிவிழும் நெல்மணிகளையும்தருவார்கள்! அது தவிர, ஆளுக்கு 50 குழி என்ற கணக்கில் 'சாட்டுவா' தந்து, அதில் விளைவதை அறுத்துக்கொள்ளவும் அனுமதிப்பார்கள்! — இது, ஏழை பண்ணையாளின் வாழ்க்கையின் தேவைகளை நான்கு மாதங்களுக்குக் கூட, பூர்த்தி செய்யாது. பல இடங்களுக்கு 'தரிசு வேலை' தேடி அவன் அலையவேண்டும்! 'ஆண்டை' கூப்பிடும் நேரமெல்லாம் வந்து வேலை செய்துவிட்டு, சிந்தும் வியர்வையோடு போகவேண்டும். வரத்தவறினால், சாட்டையடி கிடைக்கும்! கூரைக் குடிசை பிய்க்கப்பட்டு அவன் விரட்டப்படுவான்!!

இவ்வளவு 'நிர்க்கதி'யில், பரம்பரை பரம்பரையாக வாடும் அவனுக்கு, ஓரளவு, நியாயம் கிடைத்திருக்கிறது. அதேபோல, குத்தகைக் காரர்களுக்கும், செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நிலத்துக்கு உரம் போடுவது உள்பட, எல்லா 'மராமத்து' வேலையும் குத்தகைக்காரனே செய்யவேண்டும் என்று சட்டத்திலிருக்கும் ஷரத்து, நியாயமில்லாதது. விளைச்சலைப் பாதிக்கக் கூடியது. ஏனெனில், நிலங்களைக் கவனிக்குமளவுக்கு, குத்தகைக்காரர்களுக்கு பணவசதி கிடையாது. இதுபோல, சிற்சில குறைபாடுகள், இந்த அவசரச் சட்டத்தில் காணப்படுகின்றன. சட்டசபை முன் வரும்போது, இந்தக் குறைபாடுகள் களையப்படுமென நம்புகிறோம்.

இந்தச் சட்டமே சாசுவதமானது என்று எவரும் நினைத்துவிட முடியாது ஏனெனில், வீட்டின் மேல் மாடியிலிருந்த குறைபாடுகள் ஓரளவு, சீர் செய்யப்பட்டு விட்டதே தவிர, 'அடிப்பீடம்' அப்படியே தான் இருக்கிறது. உழுபவனுக்கே நிலம்—என்கிற அந்தப் பீடமும், சரி செய்யப்பட்டால்தான், சமுதாய மாளிகை, நீடித்து நிற்க முடியும். அந்த உண்மையை, இது போன்ற முறைகளால் தடுத்துவிட முடியும் என, நிலப் பிரபுக்களோ, சர்க்காரோ கருதிவிடக் கூடாது. ஆச்சாரியார் அவர்கள் பேசிய பிரசங்கங்களைக் கவனிக்கும்போது, 'அந்த நோக்கம்' அடிக்கடி பளிச்சிடுகிறது. அது, ஆபத்து. மக்களுக்கு நீதி வழங்கும் மனப்பான்மையுடன், எல்லோரும், சமுதாயத்தை நோக்க வேண்டும். அப்போதுதான் சமதர்மவாழ்வு மலரும்!

★

தி. மு: க.

3-வது ஆண்டு மலர்

★

21—9—52 அன்று "திராவிட நாடு" மலர் வெளிவர இருக்கிறது.

வர்ண முகப்பும், அரிய கருத்து விருந்துமாக, மலர் திகழும்.

அருமையான கட்டுரைகள் கதைகள் பலவும் இடம் பெறுகின்றன.

எழில் மிக்கதோர் மலராக மணம் வீசும்.

மலர் பெற விரும்புவோர் 1—9—52-க்குள் 0—8—0 வோடு நமக்கு முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.

தோழர்கள், ஆங்காங்குள்ள நமது ஏஜண்டுகளிடமும், எட்டணா செலுத்தி, பதிவு செய்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட தேதிக்குப்பின், மலர் விரும்பி எவர் எழுதினாலும், கவனிக்க இயலாது.

சிறந்த மலர்! அரிய முறையில் வெளிவரும்!!

நிர்வாகி

நிறவெறி

★

சீமான்களும் சீமாட்டிகளும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்! எதிரே, மெலிந்த ஒருவனைக் கட்டிப போட்டு வதைக்கிறான் வெறியன்!!—இவ்விதம் 'சங்கர்ஸ் வீக்லி' இதழ் ஒரு கேலிச் சித்திரம் வரைந்துள்ளது. சீமான்களும் சிங்காரிகளும் இருக்கும் இடம் 'ஐக்கிய நாடுகள் சபை'; மெலிந்து அடி வாங்குப்பவன், தென்னாப்ரிக்க இந்தியர்'; வதைப்பவன் 'ஆப்ரிக்க சர்க்கார்'. தென்னாப்பிரிகாவில் நிறபேதங் காட்டி நடத்தப்பெறும் கொடுமைகளைக் கண்டும், கவலைப்படாது இருக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையை விளக்குகிறது, இந்தச் சித்திரம். நாள்தோறும் நூற்றுக் கணக்கானோர், சிறைச்சாலைக்குள் தள்ளப்பட்டுக்கொண்டுள்ளார்கள்! கோர்ட்டுகளில் குற்றம் சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டிருப்போரின் கூட்டம் தாங்க முடியவில்லையாம்! மலானின், நிறவெறியை எதிர்த்து நடைபெறும் அறப்போர் வெகு; தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெண்கள் பலரும் மனித உரிமையை நிலைநாட்டும் இந்த மகத்தான போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மனித உரிமைகளை நிலை நாட்டும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமோ, பேசாது இருக்கிறது. இத்தகைய ஐக்கிய நாடுகள் சபைக்கு, தென்னாப்ரிக்கப் பிரச்னை, இந்திய சர்க்காரால் கொண்டு செல்லப்படும் என அறிகிறோம். இந்த முடிவை ஆப்ரிக்க அறப்போர் தலைவர்களும் வரவேற்பதாக அறிகிறோம். ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பகால முதல், ஒரு வாத மேடையாக இருந்துவருகிறதே ஒழிய, எந்தப் பிரச்னையும் முடிவு கூறப்படவில்லை. எனினும், இந்திய சர்க்காரின் முடிவைப் பாராட்டுகிறோம். நிறவெறிபிடித்த மலான், நீதிமன்றத் தீர்ப்பையே அவமதித்திருக்கும்போது, ஐ. நா. சபை செய்யும் முடிவுகளுக்கு கட்டுப்படுவாரா என்பது, ஒருபிரச்னை. எனினும், இந்த அக்கிரமம் குறித்த சிந்தனை, வெளி உலகத்தோர் கண்களையும்,சிந்தனையையுமாவதுகவரும் என நம்புகிறோம். அது மூலம், உலக நாடுகள் யாவும், தலையிட்டாவது, இந்த அக்கிரமத்தை, முடிவு கட்ட முன்வராதா, என ஆசையுடன் எதிர்பார்க்கிறோம். இதே நேரத்தில், ஆப்பிரிக்காவில் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு, அறப்போர் புரிந்துவரும், வீரர்களுக்கு நமதுமரியாதையையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறோம். இந்திய அரசாங்கம், இந்த உரிமைப் பிரச்னையில், வழக்கம்போல் அலட்சியம் காட்டாமல், நடவடிக்கைகளைத் துவக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

★

தகவல் தாருங்கள்

மஜீத் குடும்பத்தாருக்கென, நெல்லிக்குப்பத்தின் சுற்று வட்டாரத்தில் இரண்டாயிரம் ரூபாய் விலையில் நிலம் வாங்க உத்தேசிக்கப்பட்டு, தோழர் பாலகுருசாமி அவர்கள் அதற்கான முயற்சியிலீடு பட்டுள்ளார். அந்தப் பகுதியில், விற்பனைக்குரிய நிலம் இருந்தால் 'திராவிட நாடு' நிலையத்திற்குத் தகவல் தந்தால் மிக உதவியாக இருக்கும். அவ்வட்டாரத்திலுள்ள கழகத் தோழர்கள், விசாரித்து விபரம் தரக் கோருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின்

★ புது நிர்வாகிகள் ★

[தலைமைக் கழகத் தாக்கீதை யொட்டி 17—8—52 காலை 8-மணிக்குத் தொடங்கி இரவு 8-மணி வரையில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சென்னை மாவட்டத் தேர்தல் விவரம்]

சென்னை

3-வது வட்டம் சிங்காரத் தோட்டம்

தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் தேர்தல் நடைபெற்றது. தேர்தெடுக்கப்பட்டோர் செயலாளர்: எம். அமிர்தநாயகம், துணைச் செயலாளர்: ஆர் எம். அருணாசலம், பொருளாளர்: ஜோசப்பாண்டியன், மாவட்டப் பிரதிநிதிகள்: ஆர். எம். அருணாசலம், எஸ். பி. டி. திராவிடமணி, செயற் குழுவினர் விவரம்: எம். அமிர்தநாயகம், ஆர். எம். அருணாசலம், ஜோசப்பாண்டியன், எஸ். பி. டி. திராவிடமணி, பி. இராமசாமி, பி. எம். இராமசாமி, டி. எம். பாண்டியன், எஸ். சின்னதுரை, கே. எ. டி. சாமி, என். காசிராசன், எஸ். பாண்டியன்.

4-வது வட்டம் சஞ்சீவிராயன்கோயில்

தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்: செயலாளர்: டி. ஆர். சந்திரன், துணைச் செயலாளர், ஏ. இராசு, பொருளாளர்: பி. கே. மாரியப்பன். மாவட்டப் பிரதிநிதிகள்: கே. எம். கண்ணபிரான், த. சேதுராசன், செயற் குழு விவரம்: எம். எஸ். கே. உலகநாதன், எஸ். ஆர். பார்த்தசாரதி, கே. பழனிச்சாமி, எஸ். செல்வராஜ், த. சேதுராசன், செ. இளந் தமிழன், என். தனபால், கி. மு. வேலன், எஸ். பி. தங்கையா, சி. ராமலிங்கம், கே. எம். கண்ணபிரான்.

5-வது வட்டம் கொருக்குப்பேட்டை

தோழர் வி. எஸ். நலங்கிள்ளி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர், செயலாளர்: ஏ. எஸ். வேணு, துணைச் செயலாளர்: ரத்தினகுமார், பொருளாளர்: எஸ். எஸ். பி. லிங்கம், மாவட்டப் பிரதிநிதிகள்: ஏ. எஸ். வேணு, எஸ். வேணு, எஸ். எஸ். பி. இலிங்கம், செயற்குழு விவரம், கேசவன், ஏகாம்பரம், ராமதாஸ், ஆர். வேணுகோபால், ஆர். வி. இராமமூர்த்தி, வீரராகவன், காந்தம்மாள், இரத்தினம்மாள்.

6-வது வட்டம் வியாசர்பாடி

தோழர் வே. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர், செயலாளர்: கொ. சிவராமக்கிருஷ்ணன், துணைச் செயலாளர்: பி. எ. வெங்கடேசலு, பொருளாளர்: மா. இளவழகன், மாவட்டப் பிரதிநிதிகள்: க. சிதம்பரம், தா. சிதம்பரநாதன், செயற் குழுவிவரம்: கொ. ஞா. நெடுமாறன், க. சிதம்பரம், டி. கோவிந்தராசன், தே. சே. ஜானகிராம், டி. பாலசுப்ரமணியம், வி. சிவஞானம், சே. அரங்கநாதன், மு. கிருஷ்ணமூர்த்தி, கே. பாப்பையன், டி. எ. ஜே. சேரன், எம். சாமுவேல், டி. ராமச்சந்திரன், தா. சிதம்பரநாதன், மு. கிருஷ்ணன்.

8-வது வட்டம் பெத்துநாய்க்கன் பேட்டை

தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர், செயலாளர்: சி. கணேசன், துணைச் செயலாளர்: க. சுந்தரேசன், பொருளாளர்: கே. டி. பொன்னுச்சாமி, மாவட்டப் பிரதிநிதிகள்: என். வி. நடராசன், சி. கணேசன், செயற்குழு உறுப்பினர்கள்: கே. எஸ். திருநாவுக்கரசு, எம். வி. சிவபூஷணம், பி. லட்சுமிபதி, எம். டி. சஞ்சீவி, கே. எம். சுந்தரேசன், டி. என். கமலநாதன், எம். என். நடராசன், கே. ஏகாம்பரம், திரிபுராந்தகன், எ. வி. கோபால், ஈ. கே. சாமி, கே. எ. சுப்ரமணி, என். வி. நடராசன், எஸ். சாம்பசிவம், நா. க. சண்முகம், என். கோபால், கே. எஸ். சிவானந்தம்.

9-வட்டம் ஏழுகிணறு

தோழர் சி. வி. இராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர், செயலாளர்: எ. எஸ். இராமன், துணைச்செயலாளர்: தேவராசன், பொருளாளர்: ஆரோக்கியதாஸ், மாவட்டப் பிரதிநிதிகள்: சு. முத்தையா, எ. எஸ். இராமன், செயற்குழு விவரம்: சு. முத்தையா, வி. எஸ். முகம், எம். எஸ். இரத்தினம், இரா. முத்துகிருஷ்ணன், வெங்கடேசன், வி. பாலன், சிவநேசன், இராஜாம்பாள்.

11-வது வட்டம் முத்தியால் பேட்டை

தோழர் சி. வி. இராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: வி. ரங்கநாதன், துணைச் செயலாளர்: டி. உலோகநாதன், பொருளாளர்: பி. வீரராகவன், மாவட்டப் பிரதிநிதிகள்: காஞ்சி. மணிமொழியார், பி. வீரராகவன், செயற்குழு: கே. குமாரசாமி, ந. பஞ்சாட்சரம், மாசிலாமணி, பாஸ்கரன், கு. லட்சுமணன், என். வி. கலைமணி, என். ஏழுமலை, வைத்தியலிங்கம், வி. முருகன், கோவிந்தசாமி, பெருமாள்.

12-வது வட்டம் ஆர்பர்

தோழர் சி. வி. இராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: இமிழன், துணைச் செயலாளர்: யூசுப், பொருளாளர்: எ. கண்ணப்பன், மாவட்டப் பிரதிநிதிகள்: யூசுப், எ. கண்ணப்பன், செயற்குழு விவரம்: அக்பர் அலி, மங்களம், எஸ். செல்வராஜ், டி. மோகன், அமீர், ஏகாம்பரம், டி. சரஸ்வதி.

13-வது கச்சாலீஸ்வரன் கோயில் வட்டம்

தோழர். அ. பொ. அரசு தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்: செயலாளர்: பல்லவன், துணைச்செயலாளர், நாஞ்சில் சேவியர், பொருளாளர்: அன்பில் அபுபக்கர், மாவட்டப் பிரதிநிதிகள்: டி. எம். பார்த்தசாரதி, நாஞ்சில் சேவியர். செயற்குழு விவரம்: தம்பிதுரை, கே. நடராசன், பழமலை வெற்றிச்செல்வன், சோணி, டி. எம் பார்த்தசாரதி, சந்திரன், கிருஷ்ணன்.

14-வது கொத்தவால்சாவடி வட்டம்

தோழர் பி. டி. அரசு தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்: செயலாளர்: கோ. செங்குட்டுவன், துணைச்செயலாளர்: ந. ஜெயராமன், பொருளாளர்: இராதாமணாளன், மாவட்டப் பிரதிநிதிகள்: கோ. செங்குட்டுவன், இரா. வேந்தன் செயற்குழு விவரம்: இரா. வேந்தன், க. தங்கவேலன், என். பார்த்தசாரதி, பி. கோபாலன், குமரன் ஆர். உராசமாணிக்கம், வர்ணமுத்து, கிருட்டிணன்.

15-வது சௌகார்பேட்டை வட்டம்

தோழர் ஆர். டி. அரசு தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: எம். எ. ஆனந்தன், துணைச்செயலாளர்: வி. என். வரதன், பொருளாளர்: வி. இராமசாமி, மாவட்டப் பிரதிநிதி: சி. வி. இராசன், வி. இராமசாமி செயற்குழு: சி. வி. இராசன், எல். எஸ். மணி, டி. எஸ். மணி, குப்பம்மாள், ஜெயராமன், வைத்தியலிங்கம், சீனுவாசன், பாலகிருஷ்ணன்.

16-வது டிரவலியன்பேசின் வட்டம்

தோழர ஆர். டி. அரசு தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: செல்வக்கண்ணம்மாள், துணைச்செயலாளர்: சி. எஸ். திராவிடமணி, பொருளாளர்: ஆர். சண்முகம், மாவட்டப் பிரதிநிதிகள்: செல்லக்கண்ணம்மாள் வானவரம்பன். செயற்குழு: எ. பி. துரை, ஆர். எஸ். துரைவேல், ஆர். எஸ். பங்கயற்செல்வி, வானவரம்பன், உருக்மாங்கதன், பாலகுருஷ்ணன், சுந்தரராசன், வி. வி. இராஜா.

17-வது தூளை வட்டம்

தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர். சு. பாலன், துணைச்செயலாளர் மு. மாசிலாமணி, பொருளாளர்: மு. கலியாணசுந்தரம், மாவட்டப் பிரதிநிதிகள்: த. தூயமணி, எஸ். எம். சின்னசாமி. செயற்குழு ம. சீனிவாசன், அ. குப்புசாமி, ஜெ. கமலக்கண்ணன், ஆர். ராஜசரத்தினம், க. இரத்தினம், ஆ. பொ. சண்முகம், மதுரமணி, கே. லா. சந்திரமோகன், வி. கே. கோவிந்தசாமி, பி. எஸ். பெருமாள், துரைக்கண்ணன், பி. சுந்தரம், வி. கோவிந்தராசன், மு. கன்னியப்பன், தி. க. சந்திரசேகரன், கே. வி. நீலம்.

18-வது புளியந்தோப்பு வட்டம்

தோழர் வ. ப. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் செயலாளர் எம். எஸ். கோவிந்தராசன், துணைச்செயலாளர் ஜி. நாராயணசாமி, பொருளாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, மாவட்டப் பிரதிநிதிகள்: எம். எஸ். கோவிந்தராசன், தி. சு. நல்லதம்பி, செயற்குழு:—தி. மதிவாணன், தி. சு. நல்லதம்பி, எம். விஸ்வநாதன், பி. ஆர் பழனிச்சாமி, சி. அன்பானந்தன், பாண்டியன், ஜி. கேசவன், எ. கே. லட்சுமணன், எஸ். சிவானந்தம், ஜெகதீசன், மாணிக்கவாசகம், ஆர். செல்வன், வி. கெங்கா.

19-வது பெரம்பூர் பேரக்ஸ் வட்டம்

தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர் டி. எஸ். சண்முகம், துணைச்செயலாளர்: எ. ஆரோக்கியசாமி, பொருளாளர். எஸ். இராமலிங்கம் மாவட்டபிரதிநிதிகள்! எ. கே. சாமி, டி. எஸ். சண்முகம். செயற்குழு: பெருமாள், வில்லாளன், எம். ஏசுதாஸ், டி. தங்கவேலு, பி. வெங்கடாசலம் கியு. ஜார்ஜ், எ. மாணிக்கம், எ. கே. சாமி, மு. மூர்த்தி, எம். சண்முகம், எம். சுப்ரமணியம், எம். முத்து.

20-வது செம்பியம் வட்டம்

தோழர் நா. கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் செயலாளர். வி. எஸ். நலங்கிள்ளி, துணைச்செயலாளர், பி. ஆர். ஏகாம்பரம் பொருளாளர்; அரங்கன், மாவட்டப் பிரதிநிதிகள்: வி. எஸ். நலங்கிள்ளி, க. இளம்பரிதி செயற்குழு: எம். ஆர். கிருஷ்ணன் ஆர். கண்ணன், ப. லோகநாதன், எம். துரைசாமி, எம். தருமன், க. இளம்பரிதி எம். இளமதி, க. சண்முகம், வி-எஸ்-இராமச்சந்திரன், ப கிருஷ்ணன், மோ. சி. பஞ்சாட்சரம் கபிலன், பாரதி, எஸ். கே. சாமி, கே. எஸ். தேவன், எ. சாமுவேல் மோகனரங்கம், விசயரங்கம்.

24-வது கொய்ப்பேட்டை வட்டம்

தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர்: கோ. காசிநாதன், துணைச்செயலாளர்: நா. கோவிந்தன், பொருளாளர்: பி. எஸ். மணி, மாவட்டப் பிரதிநிதிகள்: ஆர். டி. அரசு, க. வரதன், செயற்குழு: சோ. ந. முருகேசன், சுந்தரமூர்த்தி, க. வரதன், ந. வில்லாளன், க. அரங்கநாதன், வே-க-மணி, ந-முருகேசன், டி-கே. கன்னையன், மாக்ஸ்லசன், ஆர். டி. அரசு, இ. இளங்கோவன், பூஞ்சோலை, ராசன், வி. கிருஷ்ணசாமி, அ. வெ. துரைசிங்கம், இளஞ்செழியன், சுந்தரமூர்த்தி, த. முகிலன், இராசமன்னர்.

29-வது நேப்பியர் பார்க் வட்டம்.

தோழர் எ. கே. சாமி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: அ. பொ. அரசு, துணைச்செயலாளர்:

மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

சேர்ந்துள்ள தொகை ரூ. 2472—8—3

நிலம் வாங்கித்தர முடிவு

நெல்லிக் குப்பத்தில் நிதியளிப்பு விழா

மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதிக்காகத் திராவிடத் தோழர்கள் நிதி தாராளமாக உதவியிருக்கிறார்கள். திராவிடத்தின் எல்லா பகுதிகளில் வாழ்வோர் மட்டுமல்ல, கடல் கடந்து சென்றுள்ளோரும் நிதி அளித்துள்ளார்கள்.

நன்கொடையாகவும், நாடகத்தின் சார்பான அன்பளிப்பு மூலமும் மஜீத் குடும்பத்தாருக்குச் சேர்ந்துள்ள தொகை ரூ. **2472-8-3**

மஜீத் குடும்ப பாதுகாப்புநிதி முயற்சி இத்திங்கள் இறுதியோடு முடிவு பெறுகிறது. இதுவரை நிதி அனுப்பி யுதவியோர் அனைவருக்கும் நமது அன்புகலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், மேலும் நிதியனுப்பக்காத்திருக்கும் தோழர்களுக்கு, இனி நிதியனுப்ப வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

சேர்ந்துள்ள இத்தொகையைக் கொண்டு, மஜீத் குடும்பத்தார் அனுபவிக்க, நிலமாக வாங்கித்தர முடிவு செய்யப்பட்டு, நிலமும் விலை பேசப்பட்டு வருகிறது.

நெல்லிக்குப்பத்திலேயே, நிதியளிப்புவிழா, அடுத்த திங்களில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மஜீத் குடும்ப பாதுகாப்புநிதிக்கு உதவியோர் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

மஜீத் நிதிக்குழு.

ஆ. ச. வேலன், பொருளாளர் எஸ். இ. எம். மூசா, மாவட்டப் பிரதிநிதிகள்:—எ. என். சி. பாபு, நெல்லை வேணுகோபால், செயற்குழு: மோகன், முனுசாமி, அ. மு. சங்கரி, தமிழ்பித்தன், சரிகாலன், எம். பழனி, அந்தோணி, ஜோசப், மயில்வேல், எ. என். சி. பாபு, கா. த. தி. அரசு, சோ. குமாரசாமி, நெல்லை வேணுகோபால், சோ. தேவராசன், தாமோதரன், வெங்கடாசலம், எ. எம். சுப்ரமணியம் மோகனரங்கம்.

30-வது சிந்தாதிரிப்பேட்டை வட்டம்

தோழர் ஏ. கே. சாமி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர்: கே. வி. சீராமுலு, துணைச் செயலாளர்: தி. மணிவண்ணன், பொருளாளர்: ச. சுந்தரமூர்த்தி, மாவட்டப்பிரதிநிதிகள்: சி. வி. ஆடலழகன், பா. பத்மநாபன், நிர்வாகக்குழு: எம். கே. கண்ணன், ச. சம்பந்தன், இளமாறன், இன்பதாசன், சுப்பிரமணி, ஏ. ஜே. வாசன், எஸ். ஏ. மஜீத், என்-வைரவன், எம்-மோகன், அரங்கம், எஸ். டி. மணி, புகழேந்தி, சம்பத், முகிலன், அண்ணாமலை, ஆடலழகன், பத்மநாபன், உசேன், இராமச்சந்திரன்.

31-வது கோமளீஸ்வரன்பேட்டை

தோழர் ஏ. கே. சாமி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் :- செயலாளர்:- இளஞ்சேரலாதன், துணைச் செயலாளர்: ஏப். கலைமணி, பொருளாளர்: எம். எஸ். காதர், மாவட்டப் பிரதிநிதிகள்: அண்ணாஅன்பன், வி. இளஞ்சேரலாதன், நிர்வாகக் குழு: அண்ணாஅன்பன், துரைசாமி வீரராகவலு, மருதவாணன், ஜம்புலிங்கம், சா. ஜம்புலிங்கம், ஆ. பக்தவச்சலம், தனுக்கோடி, து. -கோவிந்தசாமி, டி-சூரியப்பிரகாசம் கண்ணதாசன், இராமதுரை, தமிழ்ப்பிரியன், பொன்முடி; நாகூர், சத்தியநாதன், ஜீவானந்தம், தர்மராசன்.

33-வது சேத்துப்பட்டுவட்டம்

தோழர் ஏ.கே. சாமி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் செயலாளர்: சுகத்தோழன், துணைச் செயலாளர்: சு. க. சின்னராஜ், பொருளாளர்: எல். ஆர். சாமி மாவட்டப்பிரதிநிதிகள்: அழகுமலை, ஏ. செல்வராசன், நிர்வாகக்குழு:- த. கு. இளமாறன், சிவாஜ், சுப்பிரமணியம், ஆதிமூலம், இளஞ்சேரன், மாதவராவ், கண்ணன், இதயராசன், வெங்கடேசன், அழகுமலை, இராண்யன், ம. கண்ணன், மு. கணேசன், தருமன், வி. சி. கோவிந்தசாமி, எ. செல்வராசன்.

27-வது புதுப்பேட்டை வட்டம்

தோழர் பொன். கு. கோதண்டபாணி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: கலையழகன், துணைச் செயலாளர்: க. இரா. சம்பந்தன், பொருளாளர்: மூ. முருகேசன், மாவட்டப் பிரதிநிதிகள்: கோ. இளவரசு, பொ. நா. சண்முகம், நிர்வாகக்குழு மூ. அரங்கன், பொ. ஏழுமலை, டி. மணி, வெற்றிவீரன்.

39- வது மவுண்ட்ரோட் வட்டம்

தோழர் பொன். கு. கோதண்டபாணி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் செயலாளர்: என். கிருஷ்ணன், துணைச் செயலாளர்: கோ-கேசவன், பொருளாளர்: வி. பொன்னுசாமி. மாவட்டப்பிரதிநிதிகள்: என். கிருஷ்ணன் வி. பொன்னுசாமி, நிர்வாகக்குழு: எஸ். நமச்சிவாயம், எஸ். எஸ். மூர்த்தி, கோ. வேதாசலம், சி. ரங்கநாதன், க. பாண்டியன், டி. பாலவீரன், பி. எம். ஜெகத்திலகன், எம். மாரிமுத்து, எம். மோகன், சோ. பாண்டியன்.

42-வது வட்டம் திருவல்லிக்கேணி

தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப் பட்டோர்: செயலாளர்: இளம்பரிதி, துணைச் செயலாளர்: அரங்கசாமி, பொருளாளர்: கே. எஸ். சண்முகம். மாவட்டப் பிரதிநிதிகள்: இளம்பரிதி, கே. எஸ். சண்முகம். நிர்வாகக் குழு: நீலநாராயணன், பி. வி. குப்புசாமி, ஜ. சு. கோபால், கிருஷ்ணன், சீனுவாசன், எஸ். சண்முகவேல், வரதராசன், வி. டி. மணி, ஞானப்பிரகாசம், எம். எஸ். அப்துல் காதர், வி. எஸ். பிரகாஷ், எ. எம். மாலி, எ. ஜி. நாராயணன், எம். ஏ. பாலகிருஷ்ணன், எ. எம். சுப்ரமணியன், டி. கே. ஜெயராம், க. அகமது, வளர்மதி, வேலப்பன்.

43-வது வட்டம் மீர்சாகிப்பேட்டை

தோழர் எ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர், செயலாளர்: டி. அரங்கநாதன், துணைச் செயலாளர்: து. வேணுகோபால், பொருளாளர்: டி. எ. துரை, நிர்வாகக் குழு: டி. எ. வெங்கடாசலம், ஆர். கபாலி, புரட்சிமணி, எம். எஸ். கதிரவன், சண்முகம், தாமோதரன், இராமசாமி, சண்முகம்.

44-வது வட்டம் மைலாப்பூர்

தோழர் எம். எஸ். கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர்: பொன். கு. கோதண்டபாணி, துணைச் செயலாளர்: கோ. இலட்சுமணன், பொருளாளர்: பி. எம். மதியழகன். மாவட்டப் பிரதிநிதிகள்: பொன். கு. கோதண்டபாணி, கு. வடமலை, ஆர். திராவிடமணி, ஆ. அரங்கநாதன், கு. அரங்கநாதன், வி. சுந்தரம், எம். எஸ். எம். காதர், பி. வி. ஆனந்தம், வி. குப்புசாமி.

46-வது வட்டம் தேனாம்பேட்டை

தோழர் எ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: தோழியர் பூங்கோதை, துணைச் செயலாளர்: கே. ஜி. மாதவன், பொருளாளர்: வேணுகோபால், மாவட்டப் பிரதிநிதிகள்: பூங்கோதை, அருண்மொழி, துரைசாமி, தாமோதரன், மணிவண்ணன், தேவராசு, சின்னதுரை, க. முனுசாமி, சானகிராமன்.

48-வது சைதாப்பேட்டை வட்டம்

தோழர் டி. எம். பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: பி. அண்ணாமலை, துணைச்செயலாளர்: செங்குட்டுவன், பொருளாளர்: ஏ. ஏகாம்பரம், மாவட்டப் பிரதிநிதிகள்: த. இளங்கோ, க. முருகேசன் நிர்வாகக்குழு: த. இளங்கோ, டி. தங்கதுரை, த. சம்பந்தன், அண்ணல்தங்கோ, துரைசாமி, பேபி அம்மாள், பி. எஸ். ஆறுமுகம், சு. முருகேசன், பி. சிவராமன், எழிலன், நடராசன், கோ. அண்ணாமலை

ஆலந்தூர் கிளை

தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்: செயலாளர்: ம. கன்னியப்பன், துணைச்செயலாளர்: இரா. கோதண்டராமன் பொருளாளர் து. சிவப்பிரகாசம். மாவட்டப் பிரதிநிதிகள்: ம. கன்னியப்பன், கோதண்டராமன் செயற்குழு: வை. சித்தார்த்தன், சாரங்கபாணி, அரங்கநாதன், இராஜு, திருநாவுக்கரசு, இராசா பாதர், ஆர். வி. இராசன், பாலன், அருணாசலம், திருநாவுக்கரசு, கிருஷ்ணசாமி, எ. கே. நடராசன்.

திருவொற்றியூர் கிளை

தோழர் எம். எஸ். கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்: செயலாளர்: சு. மாசிலாமணி துணைச் செயலாளர்: கணபதி, பொருளாளர் என். இராமசாமி, மாவட்டப்பிரதிநிதிகள்: எ. வி. ஆறுமுகம், ஆர். நமச்சிவாயம். செயற்குழு: எஸ். ஜி. வெங்கடராமன், எம். கண்ணையன், எம். வரதராஜ், எ. வி. ஆறுமுகம், டி. ஜி. பக்தவச்சலம், டி. கே. சுதர்சனம், ஆர். நமச்சிவாயம், வீரபத்திரன், எஸ். கிருஷ்ணசாமி, பி. முத்துசாமி.

மாதவரம்கிளை

தோழர் சி. கணேசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர்: மா-பொ. வேதாசலம், துணைச் செயலாளர்: எம். வி. பொன்னுரங்கம், பொருளாளர்: ஜாலேபாட்சா, வட்டப் பிரதிநிதிகள்: ச. ஜெயராஜ், கோ. தேசிங்கு, செயற்குழு: பி. கணேசன், தனசிங்கு, கோ. தேசிங்கு, தங்கதுரை, பாலசுந்தரம், ஏ. எம். சாமி, சொக்கலிங்கம், பாட்சா, க. கோவிந்தன், நாயுடு, இளங்கோவன், பாலகிருஷ்ணன், வரதன் சிங்காரம், அர்ச்சுனன், நெடுமாறன் இன்பராசன், ஜெயராசன்.

செங்குன்றம் கிளை

தோழர் சி. கணேசன் தலைமையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர். செயலாளர்: கங்காதரன், துணைச்செயலாளர்: ப. ஜெகநாதன், பொருளாளர்: ஆர் ஏழுமலை மாவட்டப்பிரதிநிதிகள்: கே. சுந்தரராசன், பி. சுந்தரமூர்த்தி, செயற்குழு: எஸ். பி. ஜெயவேல், ஆர்-எம் முனுசாமி, ந. இராகவன், கே. சுந்தரராசன், சி. கே. சாகி. வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, கே. கோவிந்தன், வி. நல்லசிவம், பி. சுந்தரமூர்த்தி, பி. எஸ். இராஜாராம், கே. பி. பாலகிருஷ்ணன், பெருமாள், ஜே. முனுசாமி, டி. சாலமோன்.

ஏஜண்டுத் தோழர்களுக்கு

தி. மு. க. மூன்றுவது ஆண்டு மலர் தேவையான காப்பிகளுக்கு முன் கூட்டியே தெரியப்படுத்துவதுடன் அதற்குரிய தொகையை 5—9—52க்குள் அனுப்பிவைக்க வேண்டும். இல்லையேல் மலர் அனுப்ப இயலாதென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்

தேனி கலவர வழக்கு

தேனி கலவரவழக்கு 22-8-52ல் பெரியகுளம் மாஜிஸ்ட்ரேட்கோர்ட்டில் நடைபெற்றது.

40 எதிரிகளில் 39 பேர் வழக்குக்கு வந்திருந்தனர்.

மீண்டும் 5—9—52-ந்தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டு, அன்று முதல் விசாரணை ஆரம்பமாகும்.

சின்ன சேலத்தில்

சி. என். ஏ.

★

24—8—52 ஞாயிறு காலை 9-30 மணியளவில், சின்ன சேலத்தையடுத்த, மேல் நாரியப்பனூரில், பொதுச் செயலாளர் சி. என். ஏ. தலைமையில், தேவராசன் — அழகம்மை திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. சிற்றூராக இருந்தாலும், கிராம மக்கள் அனைவரும் குழுமியிருந்து, திருமணப் பந்தலில் நடந்த பாராட்டுக் கூட்டப் பேச்சுக்களை மிகவும் உற்சாகத்தோடு கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. திருமணத் தம்பதிகளைப் பாராட்டி, மேல் நாரியப்பனூர் பாலசுப்ரமணியம், காஞ்சிபுரம் கவுன்சிலர் சி. வி. இராசகோபால், தில்லை-வில்லாளன் ஆகியோர் பேசிய பிறகு, சி. என். ஏ. அவர்கள் மணமக்களைப் பாராட்டியும், பகுத்தறிவியக்கத்தின் வளர்ச்சி பற்றியும், அதன் வெற்றிகளைப் பற்றியும் விளக்கிப் பேசினார்.

பகல் உணவிற்குப் பிறகு, அக்கிராமத்திலேயே தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு, மாலை 4-மணிக்கு சின்ன சேலத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கூட்டத்திற்கு மேல் நாரியப்பனூர் வாசுதேவன் தலைமை வகித்தார். முதலில் தில்லை-வில்லாளன் காங்கிரஸ் ஆட்சியாளரின் எதேச்சாதிகாரப் போக்கையும், ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளையும் கண்டித்துப் பேசினார். அதன் பிறகு, சி. என். ஏ. அவர்கள் திராவிடம் ஏன் பிரியவேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கி, அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கூட்டம் முடிந்தவுடன், அன்று இரவே, திருக்கோவிலூரில் நடைபெற்ற 'யார் குற்றவாளி?' என்ற நாடகத்திற்குத் தலைமை தாங்க வேண்டியிருந்ததால், சின்ன சேலத்தைவிட்டு, உடன்புறப்பட்டு, திருக்கோவிலூர் வந்தடைந்தார்.

நாடகம் இரவு 11-மணிக்குத் தொடங்கப் பெற்றது. நாடகத்தில், பொன்னுச்சாமிப் பிள்ளை, இராதா கிருஷ்ணன், ஆழ்வார் குப்புசாமி, நடேசன் மற்றும் பலர் நடித்தனர். நாடக முடிவில், நடிகர்களைப் பாராட்டிப் பேசினார்.

அன்று இரவு, திருவண்ணாமலை வந்து, தோழர் ப. உ. சண்முகம் வீட்டில் தங்கியிருந்துவிட்டு, ஆற்காடு வழியாக 25—8—52 மாலை காஞ்சி வந்து சேர்ந்தார்.

★

முகவரி மாற்றம்

நாகூர் ஹனிபா
5. ஹுஸைன் அலிகான் தெரு
ராயப்பேட்டை
சென்னை—14.

திருச்சி மாவட்ட தி. மு. கழகப் பணியாளர்கள் கூட்டம்

31—8—52 மாலை 3-மணியளவில், திருச்சி மாவட்ட தி. மு. கழகப் பணியாளர்கள் கூட்டம், திருச்சியில் மாவட்ட தி. மு. கழக மனையில் நடைபெறும். அவ்வமயம், பொதுச் செயலாளர் அண்ணாதுரை கழக வளர்ச்சி பற்றியும், எதிர்கால ஆக்கவேலை குறித்தும் அறிவுரை வழங்குவார். கழகப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

'திருமேனி'கள் செயல்!

"தேவ கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் திருமேனிகளுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம். இப்பவும் தாங்கள் எல்லாம்கூடி, முடிவுசெய்ததாக ஒரு சமாசாரத்தைப் பத்திரிகையில் படித்தேன். அறிவும், திருவும், உருவும் — அதற்கு மேலாக எம்பிரான் ஏழுமலையானைத் தரிசிக்கும் பாக்கியமும் பெற்ற தாங்களா இவ்விதம் செய்தீர்கள் என, என் ஆன்மா, துடித்தது. சர்வவியாபியாய் நிறைந்திருக்கும் வெங்கடாஜலபதியின் தாசனாகிய நான், அது சம்பந்தமாக விக்ஞாபனம் ஒன்றைச் சமர்ப்பிக்கிறேன். காலநிலையை அனுசரித்து யுக்தானுசாரம்நாமெல்லாம் நடந்துகொள்ளவேண்டும்."

*

இவ்விதம் எழுதியிருக்கவேண்டிய கடிதம்! ஆனால், அனந்தசயனம் கொஞ்சம், ஆத்திரமும் அவசரமும் கலக்க, வேறு வார்த்தைகளில் எழுதியிருக்கிறார். வேறு யாருக்குமல்ல! திருப்பதி–திருமலைக்கோயில் தர்மக்கர்த்தாக்களுக்கு. அதைக் கண்ணுற்ற அவர்கள் சீறினராம்— 'போடு குப்பையில்!' என்று குமுறினராம். தோழர் அனந்தசயனம், பார்லிமெண்டு உறுப்பினர்! பார்லிமெண்டின் உதவி சபாநாயகர்!! — அதனால் தனக்குப் பழக்கப்பட்ட இரண்டொரு வார்த்தைகளை வலியுறுத்தி, மேற்படி கடிதத்தைத் தீட்டியிருக்கிறார். அந்த வார்த்தைகள், 'எம்பிரானைப்' பராமரிக்கும் தர்மகர்த்தாக்களைச் சீறியெழச் செய்திருக்கிறது. அரசவையில் அமர்ந்திருக்கும், அனந்தசயனம், அப்படியென்ன காரசாரமாகஎழுதியிருப்பார் என்று கேட்கலாம். "ஏழுமலையானுக்கு எனிந்த வைர முடி? எடுத்து அதைப் பணமாக்குங்கள்! உண்டியலில் குவியும் லட்சக்கணக்கான ரூபாய்களை உடனுக்குடன் பணக்கஷ்டத்தால் திண்டாடும் பிரதமர் நேருவுக்கு அனுப்புவீர்! இடமில்லையென்று அலையும் ஏழைமாணவர்களுக்கு இன்னொரு கல்லூரி அமைத்துத் தருவீர்!" — இப்படியெல்லாம், எழுதக்கூடிய ஆசாமியா அவர்? ஆகவே, தர்மகர்த்தாக்கள், மனமும் தொந்தியும் கொதிக்கக்கூடிய இந்த வார்த்தைகள் எதையும் அவர் தீட்டவில்லை. ஆனாலும், தர்மகர்த்தாக்கள், அவரது கடிதத்தை மதிக்கவில்லை — கோரிக்கையை மறுத்துவிட்டார்கள். அவ்விதம் தர்மக்கர்த்தாக்களின் கோபாக்கினியைக் கிளறக்கூடியவிதமாக, அனந்தசயனம் M. P. எழுதிய அந்த வார்த்தைகள் என்ன தெரியுமா?

> போதுஸ்தாபனம்
>
> அங்கு நடக்கும் காரியங்கள் மக்களுக்கு தெரியவேண்டும்.
>
> நாடெங்குமுள்ளோர் காணிக்கை செலுத்தும் இடம்.

இந்த, வார்த்தைகள் மூலம், தனது எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறார். இவை உங்களுக்கும் நமக்கும் சாதாரணமானவைதான்! அன்பர் அனந்தசயனம் கூட 'ஜனநாயகம்' பேசப்படும் இந்த யுகத்தில், இந்தச் சாதாரண ஆலோசனையை ஏற்கத் தயங்கார், தர்மகர்த்தாக்கள் என்ற கருத்துடன் தான், கடிதத்தைத் தீட்டியிருப்பார்! ஆனல் அவருக்கு அஞ்சக் கூடியவர்களா 'நமது' தர்மகர்த்தாக்கள்! ஆண்டவன் 'பட்ஜட்டை' வகுப்பவர்களாயிற்றே! எப்பேற்பட்டவர்கள்! எத்தனை சில்லரைக்கோயில்களின் 'பட்ஜட்' பராமரிப்புக்குப் பின், திருப்பதியானுக்கு "சேவை" (!) செய்ய, அமர்த்தப்படுகிறார்கள். ஆலோசனை கூற அனந்தசயனம் யார்? அந்த வட்டாரத்துப் பார்லிமெண்டு உறுப்பினராயிற்றே, என்பீர்கள்! உண்மை. அது மட்டுமல்ல உங்களையும் நம்மையும்போலக் கோயிலாருடன் மோதிக்கொள்ளும் குணம் படைத்தவருமல்ல. பக்திமான், பரமாத்மாவின் திருப்பெயரைத் தாங்கியவர். அடிக்கடி பரமதயாளனின் பாதாரகமலங்களைச் சேவிக்க, மலைப்படிகளில் ஏறி இறங்குபவர். அரசுப் பொறுப்பேற்றிருப்போரோடு கூடியுலவும் கியாதி பெற்றவர். கீர்த்தி மிக்கவரும் கூட— வைணவர் குழாத்தில். ஏழுமலையானுக்குத் தீங்குவரினும் சகியாத சற்புத்திரர்களின் முதல் வரிசையில் இருப்பவர். அவரது, விருப்பத்தை- அல்ல! அல்ல!! வேண்டுகோளை — நிராகரித்துவிட்டனர், "யார், இவன் யோசனை கூற?" என்று, கடிதத்துக்கு மதிப்பளிக்கவில்லை. காரணம், அனந்தசயனம், தாம் இருக்கும் பார்லிமெண்டுச் சூழ்நிலையையொட்டி, பரமனைப் பாதுகாப்போருக்கு, இரண்டொரு விஷயங்களை ஞாபகமூட்டியதுதான். அவர் நினைவூட்டிய வாசகங்கள்,

> கோயில் ஒருபோதுஸ்தாபனம். அதை நிர்வகிப்போரின் நிர்வாக விஷயங்கள் நாட்டுக்குத் தெரிய வேண்டும்.
>
> அதற்கான வகையில். தர்மகர்த்தாக்கள் கூடும் கூட்டங்களுக்கு, பத்திரிகை நிருபர்களை அனுமதிக்க வேண்டும்.

இவைதான். இதை நிராகரித்திருக்கிறார்கள். அனந்தசயனம் மட்டுமல்ல, தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனத் தலைவரும், தர்மகர்த்தாக்களுக்கு, பத்திரிகை நிருபர்களை அனுமதிக்குமாறு கோரி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். "பத்திரிகை பாமரருக்குத்தானே! பரமன் விஷயத்தை பாமர ஜனங்களுக்கு எதற்குச் சொல்லுவது?" எனும், முடிவோடு, ஆகஸ்டு 22ந் தேதி நடைபெற்ற மேற்படி கோயில் தர்மகர்த்தாக்கள், இருவர் வேண்டுகோளையும் புறக்கணித்துவிட்டு, "இனி எந்தப் பத்திரிகை நிருபரையும் எமது கூட்டங்களில் அனுமதியோம்" என்று தீர்மானமாகத் தெரிவித்துவிட்டனர். பாமர ஜனங்களுக்கு பரமன் விஷயத்தை சொல்லக் கூடாது என்றெண்ணி, இம் முடிவு, செய்யப்பட்டதோவென்று பார்த்தால் மேற்படி தர்மகர்த்தாக்களில் எவரும் முற்றும் துறந்த முனிபுங்கவரல்ல! மூவாசையையும் ஒழித்து, நரை மூதிர்ந்து, 'நாதன் தாளடி பணி மனமே' என்று பஜனை பாடும் வயதினருமல்ல! மேற்படி தர்மகர்த்தாக்களின் தலைவர் வடபாதிமங்கலம் 'மைனர்' என்று அழைக்கப்படும் ஆரூர் தியாகராஜ முதலியார்! ஆயிரக்கணக்கான சொந்த நிலமும் அதற்குச் சமமான கோயில் நிலமும் கொண்டு வாழ்பவர்! தஞ்சைச் சீமான்!! சமீபத்தில் "தேசியக் குளத்தில்" மூழ்கி "எப்போது கிடைக்கும் பதவிமோட்சம்" எனும்ஆவலில் உந்தப்பட்டுக்கிடப்பவர். இத்தகையவர் தலைமையில் இயங்கும் தேவஸ்தானத்து கர்த்தாக்களை, எல்லாம் துறந்தவர் என எப்படிச் செப்ப முடியும்? ஆகவே, பரலோகத்துக்குப் பாதை வகுத்துத்தரும் பக்குவ வயதினரல்ல, இருந்தும் ஏன் இந்த அனுமதி மறுக்கப்படவேண்டும், பத்திரிகையாளருக்கு? தர்மகர்த்தாக்கள் கூடிப்பேசும்போது நிருபர்கள் இருந்தால் என்ன? நிருபர்கள் என்ன நெருப்பா! தீசர்களா! அருகே நெருங்கும் அருகதையற்றவர்களா! அல்லது, 'ஆண்டவனே வந்து அவர்கள் வரக்கூடாது' என்று தர்மகர்த்தாக்களின் கனவில் கூறிச் சென்றாரா? என்ன காரணம் இருக்கமுடியும், இந்தச் செயலுக்கு! — "பொதுஸ்தாபனம் கோயில்; அதன் விபரங்களை மூடி வைக்காதீர்கள்" என்கிறார், அனந்தசயனம். "கோயிலின் நலன்களில் மக்களுக்கு கவலை உண்டு–மக்களைப் பிரிக்காதீர்கள் கோயில் விபரம் பெறக்கூடாமல்"—என்றும் எழுதியிருக்கிறார். ஆனால், தர்மகர்த்தாக்கள் மறுக்கிறார்கள், இந்தச் சலுகையை! காரணம் என்ன கூறமுடியும்? தர்மகர்த்தாக்கள் கூட்டத்தில் நடப்பவை மக்களுக்குத் தெரியாமல் தடுக்கப்படவேண்டுமென்ற எண்ணம் எழுவதேன்?

பொதுஸ்தாபன நிர்வாகத்தை யேற்றோரிடையில் "இரகஸ்யம்" காக்கப்படவேண்டுமென்று கருதுவதேன்? "இரகஸ்யம்" என்ற வார்த்தை எழுந்தாலே உள்ளுக்குள் ஏதோ, நாற்றம் என்றன்றோ, கருதப்படும்! அத்தகைய 'நாற்றம்' ஏதாவது, அங்கு, அடிப்பதுண்டா? 'ஆம்' எனில் அதை மூடிவைத்தே, காலத்தைக் கழிக்கவேண்டுமென்ற எண்ணம் தர்மகர்த்தாக்களுக்கேன் ஏற்படவேண்டும். அகில உலகையும் காத்து ரட்சிக்கும் எம்பிரானுக்கு அனுதினமும் நடைபெறுகின்ற பூசனைகளையும், அர்ச்சனைகளையும், கண்காணிக்கவேண்டிய திருக்குழாம். இதுபோன்ற நடவடிக்கைகளையெடுப்பதேன்! அதிலும், திருப்பதியார், சாதாரண கடவுள் அல்ல. ஏராளமான வருவாய்களை உடையவர். அவரது நிர்வாகக் குழாம், ஒரு தனிசர்க்கார் எனலாம். அவ்வளவு பணம் குவியும் ஒரு ஸ்தாபனத்தின் போர்டு கூடும் போது, அந்தக் கூட்டங்களுக்குப் பத்திரிகையாளர் போகக்கூடாதாம். வந்தால் அனுமதியோம்!—என்று, முடிவு செய்திருக்கிறார்கள். பக்தர் அனந்தசயனம், 'ஜனநாயகம்' எனும் சொல்லை அடிக்கடி கேட்பதால், அது கோயிலிலும் வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். ஆனல் கோயிலாரோ, மறுத்துவிட்டார்கள். அவரும் பக்தர்! இவர்கள் பக்தர்களின் எண்ணிக்கையையும் பணவருவாயையும் கணக்கிட்டுப்பார்க்கும் தர்மகர்த்தாக்கள்! பக்தர் கோருகிறார்—பரிபாலனம் செய்வோர் மறுக்கிறார்கள். என்ன காரணம் என்றுயோசித்துக் கூறுங்கள்!

தேனி வழக்கு நிதிக்காக

மதுரையில்

31—8—52 ஞாயிறு இரவு 10-மணிக்கு

மு. கருணாநிதி

தீட்டி, நடிக்கும்

இளைஞன் குரல்

[நாடகம்]

கழக வீரர்கள் நடிக்கின்றனர்

★

மாஜிக் — ஒரு தந்திரம்

'மந்திரக் கோல்' என்ற ஒன்றைக் காட்டி ஜால வித்தைகளைச் செய்வோரைக்கண்டிருக்கிறோம். வீதியிலே, தினசரி வயிற்றுப்பாட்டுக்காக இந்தவித்தைகளைச் செய்து காட்டுவோரும், வசதியும், வருவாயும் அதிகமிருப்பதால் சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் போட்டு மக்களை பிரமிக்கச் செய்வோரும்க, இந்த ஜாலவித்தைகளைக் காட்டுவோர் இருக்கிறார்கள். சென்னையில் கடந்த ஆண்டு புரொபசர் கோஷ் என்றபெயரோடு ஒரு ஆசாமி, இந்த வேடிக்கைகளைச் செய்து காட்டினர். பலர் வியந்தார்கள்! 'எப்படி இதெல்லாம் முடிந்தது?' என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள். இந்த ஜால வித்தைகளை வயிற்றுப் பிழைப்பாக வைத்து அவர்கள்நடத்திக்கொண்டு போவதைக்குறித்து நமக்குக் கவலையில்லை. ஆனல், அவைகளுக்கு ஒரு மகத்துவம் கற்பித்து, 'காளியின் செயல்!' என்றும்; மந்திரக்கோலின் மகிமை' என்பதாகவும் கூறி மக்களிடையில் மடைமையைப் பரப்பி வருகிறார்கள். மந்திரவாதி—என்றாலே, சித்துவிளையாடக்கூடியவன், பில்லிசூனியம் வைப்பவன், என்கிற பயம் நமது மக்களிடம் நிறைய உண்டு. இந்த மூடநம்பிக்கையை ஒழிக்கும் முக்கியப் பணியில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழரான தூத்துக்குடி அப்பாச்சாமி எனும் இளைஞர், ஆங்காங்குசென்று விளக்கி வருகிறார். வாய்ப்பேச்சால் அல்ல! மந்திரவாதிகள் என்போர் என்னென்ன வித்தைகள் காட்டுகிறார்களோ, அவையனைத்தையும் செய்து காட்டி அவைகள் எவ்விதம் செய்யப்படுவது என்பதையும் விளக்கி வருகிறார். வெளியூர்களில் கடந்த ஓராண்டில், பல கிளைக்கழகங்கள் சார்பில் மேற்படி வித்தைகளைச் செய்து காட்டியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

கடந்த 17—8—52 அன்று காஞ்சி கண்ணன் டாக்கீசில், தி. மு. க. சார்பில், அவரும் அவருடைய தோழரான தூத்துக்குடி கனியும், தோழர் மு. கருணாநிதி தலைமையில் நடத்திக்காட்டினர். 24—8—52 அன்று சென்னையில் நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி தலைமையில் நடத்தியதாகவும், ஏராளமான மக்கள் கண்டு களித்ததாகவும் அறிகிறோம். ஒரு பையனைப் பெட்டியில் படுக்கவைத்து உடம்பை இரண்டாக வெட்டுவது! மண்லை, லட்டாக மாற்றுவது! வாயில் ஒரு நூல்துண்டைப் போட்டு நூறுகஜத்துக்கு மேல் நூல் எடுப்பது! கைகடிகாரத்தை உடைத்துத் திரும்ப அதே மாதிரி தருவது! கொதிக்கும் நீரில் அல்வா! தங்கமோதிரத்தை வீசிவிட்டு உடையாத முழுத் தேங்காய்க் குள்ளிருக்கும் முட்டையை வெட்டி நூல்பந்திலிருந்து எடுத்துக்கொடுப்பது! தூண்கிட்டு தூண் மாறுவது! கழுத்தில் கத்தியைக்குத்திப் பேசச்செய்வது!—இதுபோல, ஏராளமான வேடிக்கைகள். அத்தனையும் நம்மைப் பிரமிக்கவைக்கும். இந்த 'அறிவு விருந்து' தொடர்ந்து பலப்பல ஊர்களில் நடைபெறுவது, மூடநம்பிக்கையை முறியடிக்க உதவும்.

★

புதுப் பெயர்

பாரத் வருஷம்!
பரதகண்டம்!!

இந்தப் பெயர்களால், அழைக்கப்பட்ட இந்த மாபெரும் உபகண்டம் பிறகு 'இந்தியா' என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வந்தது. பாகிஸ்தான் உருவானபின், மீதப்பட்ட இந்தியாவை 'இந்துஸ்தான்' என்று வெளியுலகினர் அழைத்தார்கள். ஆனால், டில்லியினரோ, அது கூடாதெனக்கூறி, "பாரத்" என்கிற பெயரைச்சூட்டினர். பாரத்-பலருக்குப் புரியாததுமட்டுமல்ல, பழைய பெயரே இன்னும் நீடித்து வருகிறது! 'பாகிஸ்தான்'-கோரியபோது, அதை மறுத்தவர்கள் காட்டிய காரணங்களில் ஒன்று, "இந்தியாவை—இரண்டாக்குவதா? எப்பெயரிட்டு அழைப்போம், இனி!" என்பதாகும். வாதத்துக்குப் பொருந்தாத இந்த வார்த்தைகள் காற்றோடு போய்விட்டன. "நாற்பதுகோடி மக்கள் —— நாம் எல்லாம் இந்தியர்" என்கிற போலித்திரையை, ஜின்னாவின், ராஜதந்திரம் கிழித்தெறிந்துவிட்டது. அகில உலக அரங்கில் புதுநாடு ஒன்று உருவாயிற்று! பாகிஸ்தான் எழுந்தது!! புதுநாடுகள் உருவாவதும், புதுப்பெயர்கள் அவைகளுக்குச் சூட்டப்படுவதும், நடக்க முடியாத காரியங்களல்ல. அந்த நேரத்துக்கு அது சிலருக்கு வேதனை தரக்கூடியதாக இருக்கலாமேயொழிய, உலகத்தில், இது அதிசய சம்பவமல்ல. பாலஸ்தீனம்—என்று பெருமிதத்தோடு பேசப்பட்டுவந்த பூமியில் இப்போது 'இரு நாடுகள்'தான், இருந்து வருகின்றன. யூதர்களின் ராஜ்யமான "இஸ்ரேல்" புதிதாக உதித்தபெயர்தான்! அராபியர் பிடியிலிருந்து, விலகி, தமக்கென அமைத்துக்கொண்ட தேசமாகும் அது. இஸ்ரேல் நாடு அமைக்கப்பட்டபின் அது புனர்நிர்மாணம்செய்யப்பட்ட விபரங்களைக் கேட்டால் வேடிக்கையாயிருக்கும்! வேண்டிய அளவு ஜனங்கள் இல்லையாம், அங்கு. அதனால், உலக முழுமையும் பரவிக்கிடந்த யூத இனத்தவரையெல்லாம் வேண்டுகோள் விடுத்து, அழைத்து அங்கு வாழச் செய்து வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான வீடுகளும் தொழில்களும் யூத சர்க்காரால் அமைத்துத் தரப்படுகின்றன! 'நாடு இல்லாத இனம்'-என்று உலகால் தூற்றப்பட்ட, யூதர்கள் புதுராஜ்யம் பெற்று, "இஸ்ரேல்—எமது இன்பபூமி" என்று, குதூகலம் அடைகிறார்கள். உலக அரங்கில் புதுதேசங்கள் நிர்மாணம் ஆவதும், பழைய இடங்கள் மாறுவதும் நடைபெறமுடியாத — அல்லது கூடாத — நிகழ்ச்சிகள் அல்ல. அகண்ட இந்து சாம்ராஜ்யம்! பரந்த பூமி! நாற்பதுகோடி மக்கள்! —என்று புகழ்ந்துரைக்கப்பட்ட, இந்த மாபெரும் உபகண்டத்துக்கு, மற்றோர் பெயர் வைத்து அழைக்கலாம் என யோசனை கூறுகிறார், ஒருவர். பாகிஸ்தான்! பாரத்!! —பழைய இந்தியாவின், இரண்டுகூறுகள். இந்த இரண்டு தேசங்களையும் சேர்த்து, வெளியுலகுக்குச்சொல்ல ஒரு புதுப்பெயர் கண்டுபிடித்திருக்கிறார், கல்கத்தா "ஸ்டேட்ஸ்மேன்" பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் சர்ஜவான்ஸ்பேன்ஸ். பாகிஸ்தான்! இந்துஸ்தான்!!—இப்படிக்கூறுவதைவிட, இரண்டையும் குறிக்கும் ஒரு புதுப் பெயர்மூலம், விளக்கலாம் என்பது அவரது எண்ணம். பாகிஸ்தான்! என்று சொல்லிவிட்டு,பிறகு, இந்தியா!! என்று குறிப்பிட்டால், வெளி உலகத்தோர் கேட்கலாமல்லவா? "இந்தியாதான் துண்டாடப்பட்டுவிட்டதே!—என்று. இதற்கு விளக்கம் சொல்லிக்கொண்டு வேதனைப்படுவதைவிடப் பிரிந்த இருநாடுகளையும் ஒரு புதுப் பெயரால் குறிப்பிடலாம் என்கிறார். அந்தப்புதுப்பெயர் டெல்கரியா (Delkaria) என்பதாகும். டெல் என்பது இந்தியத் தலைநகரின் பெயருக்கு முன்னிருக்கும் எழுத்துக்கள். (Delicious) என்பதற்கு 'மதுரமான' என்பது பொருளாகும். அதைக்குறிக்கும் ஆங்கிலச் சொல்லின் முகலெழுத்து 'டெல்.' இந்தியில் "தில்" என்று சொன்னால் இருதயம் என்று பொருளாகும்! அதைப்போல கரியா (Karia) என்பது கராச்சியைக் குறிப்பதோடு, இந்துஸ்தானியில் "செய் — தீவிரமாக ஈடுபடு" என்னும் அர்த்தத்தையும், ஆங்கிலத்தில் 'அணைத்துக்கொள்' எனும் பொருளையும் தரும் என்பதாக அந்த ஆசிரியர் விளக்கம் தந்துள்ளார்! இந்தோ—பாகிஸ்தானியா, பாகிந்த், இந்திபாக்—இந்தப் பெயர்கள் யாவும் சரியாக இல்லாததால், டெல்கரியா என்றே அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். "இந்தோ — பாகிஸ்தான் உபகண்டம்" (Indo--Pakistan Subcontinent) என்று அழைப்பதைவிட, புதுப் பெயரிட்டு அழைக்கலாம்,என்கிறார் அவர்!

புதுப்பெயர் — இந்த மாபெரும் உபகண்டத்துக்கு. இந்த ஆலோசனையைத் தரும் ஆசிரியர், இருபது ஆண்டுகளுக்கு மேல், இங்கே இருந்து வாழ்ந்தவர். இப்போது லண்டனில் இருப்பவர். அவர் கூறுகிறார் இதனை! இது ஒரு மாபெரும் உபகண்டம்; ஆகவே வெளியுலகிலிருப்போருக்கு இதையுணர்த்த ஒரு பெயர் தேவையென்று தெரிவிக்கிறார்! "இந்தியாவைப் பிரிப்பதா?" என்று எக்காளமிடும் அன்பர்களுக்கு வைக்கிறோம், இப்போதென்ன சொல்கிறீர்கள்?

"இந்தியா" — வில் பாகிஸ்தான் உண்டாயிற்று!

"இந்தியா"—ஒரு உபகண்டம், அதற்கு ஒரு தனிப்பெயர் வேண்டுமெனக் கூறப்படுகிறது!—

"டேல்கரியா"—என்பதே அந்த பெயர் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

★

புவனகிரியில் சந்திரமோகன்

10—8–52ல் மஜீத் குடும்பபாது காப்பு நிதிக்காக, புவனகிரியில் 'சந்திர மோகன்' நாடகம் நடத்தப் பெற்றது.

மிகக் குறுகிய காலத்தில் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டதாலும், நாடக நாளில் நல்ல அடை மழை பெய்ததாலும், எதிர்பார்த்த அளவு வசூலாக முடியவில்லை.

நாடக நிர்வாகத் தோழர்கள் கோவிந்தசாமி, இராமலிங்கம் ஆகியோர் நிதிக்காக ரூ. 1000 தருவதாக வாக்களித்திருந்தார்கள். எதிர்பாராத இயற்கைக் கோளாறால், வசூல் குறையவே, நிதிக்காக ரூ. 500 கொடுப்பதாகக் கேட்டுக்கொண்டனர். இப்பொழுது, நிதிக்காக அவர்களிடமிருந்து வந்துள்ள தொகை ரூ. 220 மிகுதியை நேரில் வந்து தருவதாக உறுதியளித்துள்ளனர். மிகுதித் தொகை கிடைத்தவுடன், மஜீத் நிதியுடன் அத்தொகையும் சேர்ப்பிக்கப்படும்.

*

'தமிழன் பெருமை!'

"தமிழன் கலை, கடல் கடந்தும் பரவிற்று: நாவாய் மூலம் நாற்றிசையும் சென்றான். அவன் இன்புற்றிருந்த போது தமிழனை அரியாசனத்திலிருந்தாள். தமிழன், நாடு பிடிக்கும் ஆசைகொண்டவனல்ல. பாலித்தீவில் அவனது கலாச்சாரம் காணக் கிடக்கிறது! ஜாவாவிலே அவனது சந்ததியார் வாழ்கிறார்கள்! இலங்கையிலே, தமிழகத்திலே உள்ள ஊர்களின் பெயர்களைக் கொண்ட பல ஊர்கள் உண்டு!!"

இவ்விதம், சென்னையில் நடத்தப்பட்ட, தமிழ் வளர்ச்சிக் கழக மாநாட்டில் பேசிய பலரும் "தமிழன் பெருமையை" குறித்து, முழக்கியிருக்கிறார்கள். இலக்கியம்—சிற்பம்—கலாச்சாரம் எல்லா வகையிலும் தமிழனே உலகில் சிறந்தவன், என்று பெருமிதத்தோடு பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்திகளை வெளியிட்ட "இந்து" இதழ், என்ன தலைப்புக் கொடுத்துப் பிரசுரித்திருக்கிறது தெரியுமா? "தமிழன் பெருமை" "தமிழர் கலாச்சாரம்" — இவ்விதம் இருக்குமென்று தானே எண்ணுவீர்கள்! அவ்விதம் செய்யக் கூடியவர்களா, அவர்கள்? பேசியவர்கள், 'தமிழனைப் பற்றி'—முழக்கினார்கள். ஆனால் 'இந்து' இதழார் தரும் தலைப்போ, "இந்தியாவின் கலாச்சாரம்!". எப்படி? தமிழகம்—இந்தியா. தமிழகத்தின் பண்டைய பெருமையைக் குறித்துப் புகழ்வதுகூட பொறுக்கவில்லை போலும். வரலாற்றை, தமது அச்சியந்திரமூலம் மூடப் பார்க்கிறார், இந்து இதழார்! இந்திய கலாச்சாரம்—தலைப்புத் தருகிறது' அந்த ஏடு. இந்தக் கும்பல்கள், காட்டும் வெறிப்போக்குக்கு என்ன பெயர் தருவரோ அன்பர், ஆச்சாரியார்? இது, துவேஷம் இல்லைப்போலும்! "மாம்பழத்தைக் கடித்துச் சுவைக்கும்போது மற்றோர் பழத்தை எண்ணிக்கொண்டால், ருசி தெரியாது. சந்தோஷத்தை இழந்துவிடுவோம்"–தமிழ் மாநாட்டைத் துவக்கி வைத்த அவர், கூறினாராம். உண்மைதான் அவர்கூற்று! மாம்பழம் சுவைக்கையில் ஆப்பிளை நினைத்து ஏங்கினால், கிடைத்த கனியின் உருசியையும் உணரான் நம்புலன்! ஆனால், மாம்பழம் இருக்கும்போது, எட்டிக்காயை நீட்டிக்கொண்டேயிருந்தால்......? — இந்தக் கேள்வியை எவரும் கேட்கவில்லை. தமிழ் வளர்க்கவந்த இடத்தில் சமஸ்கிருதத்தின்'மீது, துவேஷம் காட்டாதீர்கள் என்று, குறிப்பால் உணர்த்தியிருக்கிறார், ஆச்சாரியார். அவரது கடமை அது!! ஆனால், அதைக் கேட்டுக்கொண்டு நமது புலவர் பெருமக்கள், பேசாதிருந்திருக்கிறார்கள். தமது நாவன்மையைக் காட்டும், பெருத்த யோசனையில், இருந்துவிட்டார்கள் போலும்! பாபம், போகட்டும்!! ஆனால், 'இந்து' இதழ், காட்டியிருக்கிறதே தனது புத்தியை, அதற்கு என்னவென்று பெயரிடுவது? மாம்பழம் இருக்கும்போது, எட்டியைக் காட்டுவது பித்தன் செயல்! 'மாம்பழத்தை'யே காட்டி இது 'எட்டிக்காய்' என்று பிதற்றுவது, எத்தன் செயலாகுமே! பித்தனைவிட, எத்தன், ஆபத்தானவனன்றோ? தமிழகம், குறித்து முழக்கினால், "இந்தியாவின் சிறப்பு" என்று விளக்கம் தருகிறது!

இது, எந்த மனப்பான்மை?

துவேஷமா! அசூயையா!! வெறியா!!!

★

காஞ்சி நகரசபைத் தேர்தல்

நகர சீர்திருத்தக் கழக அபேட்சகர்கள்

காஞ்சி நகரசபைத் தேர்தலில், நகர சீர்திருத்தக் கழகச் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களைக் கீழே தந்துள்ளோம். கட்சிபேதமின்றி, நகரத்தின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதே இவர்களின் நோக்கமாகும். நகர சீர்திருத்தக் கழகத்தின் தேர்தல் சின்னம் ரிக்ஷா.

பெயர்	வார்டு
டி. இராதாகிருஷ்ணன்	1
ஆர்-எம். வெங்கடசாமிமுதலியார்	2
ராஜாமணி அம்மையார் (பெண் தொகுதி)	2
சி. வி. இராஜகோபால்	3
ஏ. எல். செல்வராஜ்	4
எம். பி. வரதன்	5
எம். பொன்னுசாமிமுதலியார்	6
ஜி. கே என். கண்ணன்	7
ஏ. கே. ஆள்வார்	8
வி. மோகன்	9
சாப்ஜான்சாகிப்	10
கே. கண்ணன் (தாழ்த்தப்பட்டோர் தொகுதி)	10
எ. சி. குருசாமி	11
வி. பட்டாபிராமன்	12
எ. கதிர்வேலு	13
கே. செல்வராஜ்	14
ஐ. சரவணப்பெருமாள்	15
எஸ். கே. தங்கவேல் செட்டி	16
சி. அருணாசல முதலியார்	18
டி. கந்தசாமி	19
வி. வைத்தியலிங்கமுதலியார்	20
காஞ்சி. கலியாணசுந்தரம்	21
பி. எ. அப்துல்ரகிமான்சாகிப்	22
எ. கே. தங்கவேலர்	25
செ. கோ. பெருமாள்	28
லேடிடாக்டர் அமிர்தசாமி (பெண் தொகுதி)	28
சி. வி. எம். அண்ணாமலை	29

*

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

24—8—52 (சேலம்) வேலூர் பொதுக் கூட்டத்துக்குச் சென்றிருந்த மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்கள், தங்கியிருந்த வீட்டிலிருந்து, கூட்டத்துக்குப் புறப்படும்போது வாயிற்படியில் தவறி வீழ்ந்துவிட்டதாகவும், அதனால் இடது கணுக்காலில் அடிபட்டதாகவும் அறிகிறோம். அடிபட்டதும் அம்மையார் வேலூர் மருத்துவ விடுதிக்கு கொண்டு செல்லப்பட்டு, இரவே வாடகைக் கார்மூலம் மாயவரத்துக்கு, கழகத் தோழர்களால் அனுப்பிவைக்கப்பட்டார்கள். மாயவரம் ஆஸ்பத்திரியில் அம்மையார் சிகிச்சை பெற்று வருகிறார்கள். "கூட்டத்துக்கு எங்கும் போகக் கூடாதென்றும் குறைந்தது ஆறு மாதம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும்" டாக்டர் கூறியுள்ளார். உடல் நலம் பெற்று வருகிறது.

சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளைகவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.